**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி - 2022**

**-----------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் (‘‘வங்கி’’) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் 2021 சனவரி 05 ஆம் திகதிய 02/19/319/0001/004 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வங்கியை கலைப்பதற்கு அல்லது தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, அந்த திகதியில் இருந்து அதன் செயற்பாடுகள், கடன் வழங்கல் மற்றும் வைப்பு பெறுவனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு பணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தீர்மானம் அறிக்கையிடல் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | NSB உடன் முன்மொழியப்பட்ட இணைப்பை நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்தையும் இலங்கை சேமிப்பு வங்கி செய்துள்ளது. NSB சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது என்று NSB ஆல் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதுடன் திறைசேரியிடம் NSB இந்தக் கோரிக்கையை வைத்துள்ளது. திறைசேரி அமைச்சரவை பத்திரத்தை தயாரித்துள்ளது, தற்போது இந்த பத்திரம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக நிலுவையில் உள்ளது. | தற்போதுள்ள வளங்களைச் செயலிழக்கச் செய்யாத வகையில் இணைப்புச் செயன்முறை விரைவுபடுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியிலிருந்து (PSDB) வழங்கப்பட்ட பின்வரும் சொத்துக்கள் முழுமையாக நட்டக்கழிவிடப்பட்டுள்ளதுடன் அந்த மீதிகளை சரிபார்ப்பதற்கு எந்த சான்றும் கிடைக்கவில்லை.<br><br>விடயம் — தொகை (ரூபா)<br>முன்கூட்டியே செலுத்தப்பட்ட கழிவு — 13,356,809<br>PSDB L/T வழக்கின் சார்பாக வைப்பு நிதி — 7,098,200 | 1. முன்கூட்டியே செலுத்தப்பட்ட கழிவு PSDB வழங்கிய போது மாற்றப்பட்டிருந்தது. எனவே சரிபார்ப்பதற்காக சான்றெதுவும் காணப்படவில்லை.<br>2. PSDB ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சனை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இரண்டு மேன்முறையீட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன, அதன் மொத்த வழக்கு பெறுமதி ரூபா 7,098,200 ஆகும். வழக்குகளாவன.<br>• எஸ்சீ/எச்சீ/எல்ஏ/01/2017<br>• எஸ்சீ/எச்சீ/எல்ஏ/02/2017 | நிதிக்கூற்றுக்களில் உள்ள ஒவ்வொரு மீதிக்கும் சான்றுகள் மற்றும் பிரித்தெடுப்புக்கள் பேணப்பட வேண்டும். |
| (ii) | 2020 ஏப்ரல் முதல் 2022 திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் மாத்தறை கிளையின் வாடகைச் செலினமாக ரூபா 6,200,000 செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 மார்ச் 31 வரை கட்டிடத்தின் உரிமையாளருடன் (NSB) வங்கி வாடகை உடன்படிக்கையை செய்திருக்கவில்லை. | மாத வாடகை செலுத்தப்படுவது தொடர்பாக NSB, தாய்க் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வாடகை செலுத்தப்படும். | சட்ட விடயங்களுக்கு எதிராக வங்கியின் நலனைப் பாதுகாப்பதற்கு வாடகை உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பின்வரும் மீதிகள் பல ஆண்டுகளாக அறவிடப்படாமல் நிலுவையாக உள்ளன.<br><br>விடயம் – தொகை (ரூபா)<br>முத்திரைத் தீர்வை – பெறவேண்டியவை – 1,999,000<br>பிந்தைய திகதி காசோலை கழிவிடப்படும் க/கு – 349,200<br>பெறவேண்டியவை - சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு - மானியம் – 3,045,845 | **பெறவேண்டிய முத்திரைத் தீர்வை –** கடன் தவணைதவறிய வாடிக்கையாளர் தொடர்பாக ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தை வங்கிக்கு கொள்வனவு செய்யும் போது மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுத் தொகையாகும். ஆதனத்தை கைதவிர்ப்புச் செய்யும் போது மாத்திரமே இந்தத் தொகையை அறவிட முடியும்.<br><br>**பிந்தைய திகதி காசோலை கழிவிடப்படும் க/கு:** மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>**பெறவேண்டிய சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு மானியம்:** இது 2021 ஏப்ரல் 1 முதல் 2022 யூன் 30 வரையிலான காலப்பகுதியில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு செலுத்தப்படும் வட்டி தொடர்பாக திறைசேரியிடமிருந்து வங்கி பெற வேண்டிய தொகையாகும். | நீண்டகால நிலுவையை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ”ஏனைய கடன் பெற்றவர்களிற்கு செலுத்த வேண்டியது” இன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட PSDB கடன்களில் ரூபா 32,249,689 தொகை 02 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ளது. | **PSDB கடன்கள் -** கோரப்படாத மீதிகள் PSDB கடன் கணக்கில் காணப்பட்டது. | நிலுவையாகவுள்ள மீதிகள் இணக்கம் செய்யப்பட்டு நியாயமான காலப்பகுதியினுள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 855,074 மீதியானது 06 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டது. | **பதிவுசெய்யப்படாத வங்கி செலவுகள் - ரூபா 841,674:** இதில் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கின் இனங்காணப்படாத வைப்புக்களும் உள்ளடங்குகிறது. இது 2023 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும்.<br>**பிழையான பதிவுகள் - ரூபா 13,400:** 2023 இல் சீர்செய்யப்படும். | வங்கியின் செயற்பாட்டு பலவீனங்களைத் தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை வலுப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 445,149,667 இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 255,144,487 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 190,005,180 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிதிக் கருவிகளின் வட்டி வருமானம் அதிகரித்தமை மற்றும் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வட்டி செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில விகிதங்கள் துறை விகிதங்களுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | துறை | | SLSBL | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| உரிமை மீதான திரும்பல் (%) | 2.3 | 21.5 | 6.40 | 4 |
| சொத்து மீதான திரும்பல் (%) | 0.1 | 1.7 | 5.19 | 4 |
| தேறிய வட்டி எல்லை | 2.4 | 4.1 | 14.98 | 7 |
| திரவச் சொத்து விகிதம் | 30.9 | 6.5 | 954 | 742 |
| ஆபத்து நிறையிடப்பட்ட மூலதன போதுமை விகிதம் – தட்டு 1 (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 5%) | 14.20 | 52.8 | 165 | 101 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| CBSL இன் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் வழிகாட்டலின் பிரகாரம் இணைப்பு தொடர்பான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதே வங்கியின் முக்கிய முன்னுரிமையாக இருந்த போதிலும் வங்கி பொறுப்பற்ற முறையில் செயற்பட்டதற்கு பல நிகழ்வுகள் உள்ளன. சில நிகழ்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.<br><br>(i) 2022 மே 23 ஆம் திகதிய 2022 இன் 04 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டலின் 7.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பொருத்தமான நிதி நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கு அல்லது இணைப்பதற்கான திட்டங்களை உள்ளடக்கிய மூலதனப் பெருக்கத் திட்டத்தை வங்கி சமர்ப்பித்திருக்கவில்லை.<br><br>(ii) CBSL இன் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் 2023 பெப்ரவரி 03 ஆம் திகதிய 02/19/319/0001/005 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் திறமையான பதவியணியினர் இல்லாததால், SLSBL இன் செயற்பாட்டுச் சிக்கல்கள் காரணமாக | 2020/12/10 இல் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டில் ஏதேனும் பற்றாக்குறை இருந்தால் தாயால் நிதியளிக்கப்படும் என தாய்க் கம்பனி உறுதியளித்துள்ளது.<br>மத்திய வங்கி தாயிடமிருந்து அதற்கான உத்தரவாதத்தை கோரியுள்ளது, மேலும் நாங்கள் 2023/02/14 ஆம் திகதிய எங்களது கடிதம் மூலம் உத்தரவாதத்தை கோரியுள்ளோம். (இரண்டு கடிதங்களின் பிரதிகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன) | தாயுடன் பேச்சுவார்த்தையை நடாத்தி இணைப்பு செயன்முறையை வங்கி துரிதப்படுத்த வேண்டும். |

வங்கியின் இணைப்புச் செயன்முறையை அமுல்ப்படுத்துவதற்கான தேவைப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

(iii) CBSL இன் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் 2022 மே 27 ஆம் திகதிய 02/19/319/0001/005 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு NSB மற்றும் SLSBL ஆகிய இரண்டிற்கும் SLSBL இற்காக நாணய சபை அங்கீகரித்த தீர்மானக் கட்டமைப்பைச் அமுல்ப்படுத்துவதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது. எனினும், தீர்மானக் கட்டமைப்பு தொடர்பாக CBSL ஆல் அவ்வப்போது தெரிவிக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளை சரியான நேரத்தில் அமுல்ப்படுத்துவதை உறுதிப்படுத்த இரண்டு வங்கிகளும் தவறிவிட்டன.

(iv) CBSL இன் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் 2022 சனவரி 13 ஆம் திகதிய 02/19/319/0001/005 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நம்பத்தகாத எதிர்வுகூறல்களுடனும் முக்கிய இடர் மதிப்பீட்டு காரணிகளைக் கருத்தில் கொள்ளாமலும் 2022-2026 காலப்பகுதிக்கான மூலோபாய வணிகத் திட்டத்தை வங்கி சமர்ப்பித்துள்ளது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததால், தற்போதைய நிலையான சொத்துப் பதிவேட்டை வங்கி நாளதுவரையாக்கியிருக்கவில்லை.<br>உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 16,347,641 மற்றும் ரூபா 649,320 தொகையான உறுதி செய்யப்படாத மற்றும் பௌதீக ரீதியாக காணப்படாத நிலையான சொத்துக்கள் காணப்பட்டன. | இது ஏற்கனவே சீர்செய்யப்பட்டுள்ளது.<br><br>நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கான சபை அங்கீகாரம் 2023.03.29 இல் பெறப்பட்டது. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு நியாயமான காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் வங்கியின் கடன் அறவீட்டின் முன்னேற்றம் பல கடன் வகைகளுக்கு | SLS திரிய கடன் திட்டமானது கொவிட்-19 தொற்றுநோய் | வங்கியின் கடனை அறவிடும் நடைமுறை |

| | | |
|---|---|---|
| திருப்திகரமான மட்டத்தில் இருந்த போதிலும் SLS திரிய கடன் திட்டத்தில் செயற்பாடற்ற கடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு அவதானிக்கப்பட்டது. செயற்பாடுகள் நிறுத்தப்பட்ட திகதியில் நிலவிய NPL விகிதத்துடன் ஒப்பிடும் போது இது 411 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. | மற்றும் நாட்டின் சமீபத்திய பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்ட துறையான MSME துறைக்கு வழங்கப்பட்ட கடன்களைக் கொண்டுள்ளது.<br><br>பல SME கடன்களைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு பெரிய பெறுமதியான சில கடன்கள் NPL இற்கு மாற்றப்பட்டன. 2023.03.31 இல் உள்ளவாறான NPL கடன்களின் மொத்த எண்ணிக்கை 15 கடன்களாகும், அவற்றில் ரூபா 9.2 மில்லியன் தொகையான இரண்டு வசதிகள் 2023.06.30 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.<br><br>வங்கி இந்த வசதிகளை முறைப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளதுடன் சில வசதிகள் தற்போது வழக்கின் கீழ் உள்ளன, சில வசதிகள் மீள்பட்டியலிடல் செயன்முறையில் உள்ளன.<br><br>அதன் பிரகாரம், 2023.06.30 இல் உள்ளவாறான NPL மீதி ரூபா 10 மில்லியனால் ரூபா 121 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. வங்கியால் எடுக்கப்பட்ட கடுமையான அறவீட்டு நடவடிக்கைகளின் காரணமாக ஆண்டின் இறுதியளவில் NPL மீதி மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. | துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**3.3 மனித வள முகாமைததுவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | செயலாளர் தரம் I இற்கான தொழில் பாதை கிடைக்காத காரணத்தால் இரண்டு ஊழியர்கள் 2020 செப்தெம்பர் 01 இல் தட்டெழுத்தாளர்-III பதவிக்கு பதவி உயர்வு பெற்றிருந்ததுடன் இந்த பதவி வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் | 2019 திசெம்பர் 18 இல் நடைபெற்ற NSB இன் GM/CEO தலைமையிலான நிறைவேற்று மனித வளக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. செயலாளர் தரம் I இற்கான தொழில் பாதை கிடைக்காததைக் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தை வங்கி பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படவில்லை. | கருத்தில் கொண்டு அவர்களின் அடுத்த தரம்/ பதவி உயர்வில் அவர்களை NSB கட்டமைப்பின் தட்டெழுத்தாளர்-III தரத்தில் வைப்பதற்கு குழு முடிவு செய்தது. | |
| (ii) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான வங்கியின் பதவியணியினர் 102 ஆகும், மேலும் அவர்களுக்கு 2021 சனவரி 05 முதல் 2023 மார்ச் 31 வரையிலான காலப்பகுதிக்கான பதவியணியினரின் சம்பளம் மற்றும் மிகையூதியமாக ரூபா 553,344,959 செலுத்தப்பட்டது. பதவியணியினரின் சம்பளமாக கணிசமானளவு கிரயம் ஏற்பட்டிருந்த போதிலும் வங்கியின் முக்கிய செயல்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்தியதால் ஏற்படும் கிரயத்துக்கான உகந்த பலனை வங்கிக்கு கொண்டு வர வங்கியால் முடியவில்லை. வங்கியின் இணைப்பு முன்மொழிவை அமுல்ப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால், இந்த நிலைமை எதிர்காலத்திலும் தொடரும் என்பது தெரிகிறது. | 2021 சனவரி 05 முதல் வங்கியின் வைப்பு பெறுதல் மற்றும் கடன் வழங்கும் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டிருந்த போதிலும் அறவீடுகள், சட்ட நடவடிக்கைகள், நிதி அறிக்கையிடல், இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கம், திறைசேரி முகாமைத்துவம் மற்றும் கிளைச் செயற்பாடுகளில் ஏனைய அனைத்து பிரமாணரீதியான மற்றும் சட்டரீதியான தேவைப்பாடுகளையும் வங்கி பின்பற்ற வேண்டியுள்ளது.<br><br>வங்கி 2022 ஆம் ஆண்டில் NSB மற்றும் NSB பண்ட் மனேஜ்மென்ட் லிமிட்டட் ஆகியவற்றிற்கு 05 பதவியணி உறுப்பினர்களை இரண்டாந்தர அடிப்படையில் அனுப்பியுள்ளது. மேலும், கூடுதல் பதவியணியினரை இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்க முடியும் என வங்கி தாய் NSB இற்குத் தெரிவித்துள்ளது.<br><br>மேலும், இணைப்பு செயன்முறையை 2023.09.30 இற்குள் பூர்த்தி செய்வதற்கு CBSL சமீபத்தில் காலக்கெடுவை வழங்கியுள்ளது.<br><br>இணங்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சம்பளக் கொள்கைகளின் பிரகாரம் ஊழியர்களின் சம்பளம் செலுத்தப்படுகிறது. | வங்கியின் மனித வளத்தை செயற்திறனான முறையில் பயன்படுத்த வேண்டும். |